37

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 } 37 விரோதி௵—வைகாசிமீ 1949௵ மே—ஜூன்மீ 18579 { இதழ் 2



ஆதி மஹா விருக்ஷம் பாலயந்தம் குஹம் பஜே !

வேடிச்சி மங்கைமுன் வேடிக்கை பலசெய்து
வேங்கைமர மாகி நின்றாய்.

கிடைக்குமிடம்:—

அமிர்தவசனி காரியாலயம்

54, பந்தர் தெரு, சென்னை

பொருளடக்கம்

1.	பஜனை	திருப்புகழ்மணி ...	1
2.	நற்பெருந் தெய்வம்	இளவழகனர் ...	5
3.	இன்பம்	D. ராமஸ்வாமி ...	8
4	அடியார் கூட்டம்	ஸ்ரீ ரமண ...	11
5.	வைஷ்ணவர் செல்வம்	வேங்கடராம சாஸ்திரி ...	13
6.	அகப் பண்பாடு	ராமரத்னம் ...	16
7.	பழம் பழநி	கி. வ. ஜகந்நாதன் ...	19
8.	பக்தியும் இசையும்	மீனாக்ஷிசுந்தரம் ...	25
9.	சித்தர் நூல் முன்னுரை	ஸ்ரீவத்ஸன் ...	27
10.	அடியார் ஞாயிறு திருக்கூட்டம்	...	30

ஒவ்வொரு ஊரிலும் அடியார் திருக்கூட்டம் ஏற்பட்டு, ஆண்டவன் வழிபாட்டில் ஈடுபட முந்துங்கள்.

சந்தாதாரர்களாகச் சேர 12 மாதப் பிரதிகளுக்குச் சந்தா ரூ. 1—8—0 அனுப்பவும். ஏஜண்டுகளுக்கு 50 பிரதிகள் ரூ. 6—4—0 (அனுப்பவும்)

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

" எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன் றறியேன்பராபரமே "

மலர் 1 } விரோதி௵ வைகாசி௴ 1949 மே—ஜூன்௴ { இதழ் 2

பஜனை

(திருப்புகழ்மணி)

இறைவன் அருளால் பஜனை கோஷ்டிகள் அநேகம் ஏற்பட்டுவிட்டன. தமிழ் நாட்டில் மாத்திரம் அல்ல, வட நாட்டிலும் மக்களுக்கு 'ஆண்டவன் நாம ருசியிலும் சங்கீர்த்தனத்திலும் பெரும்பற்று பரவி வருகிறது. தொன்று தொட்டுவந்த பண்பல்லவா? ஒரு காலத்தில் மேல்நாட்டு ஆட்சியில், ஆர்வம் கீழ் அடைந்தாற்போல் இருந்தாலும், மறுபடியும் பஜனை ஆர்வம் புத்துயிர்பெற்று விட்டது என்றே சொல்லலாம்.

பஜனை என்றால் என்ன? ஏகாந்த அநுபவமா? சங்க நிக்ரகமா? சங்கத்தில் ஆராதனையா? சங்கீதமா? நாட்டியமா? நடனமா? கலையா? பாஷா ஞானமா? அதுகடந்த இடமா? ஆத்மாநுபவமா? நினைப்பின் கிளர்ச்சியா? மறப்பின் உணர்ச்சியா? இப்படி அநேகர் பஜனை எனும் பாவத்தை ஆராய்ந்திருந்தாலும், பிறருக்கு மொழிகளால் இசைவிக்க முடியாமலிருப்பதை உணர்ந்

திருக்கிறார்கள். உடலில் ஒளிரும் உயிரை யாவரும் அறிய வல்லரேனும் உயிரை லக்ஷணங்களால் வரைவது அசாத்திய மாய் இருப்பதுபோல, பஜனையை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம். வார்த்தைகளால் உணர்த்தமுடிவதில்லை. ஏன்?

பஜனை மானிடன் இயற்றும் ஒரு முயற்சியாகவும் முயற்சியின் பலனாகவும், அனுபூதியாகவும் இருத்தலால் தான். காலகதியில் நிர்மாணிக்கப்பட்ட இந்த உலக ஸ்ருஷ்டி காலாதீதமான ஒரு அடிப்படை ஆனந்தத்தில் தாங்கப்பெற்றிருக்கின்றது. காலத்தின் ஓட்டத்தைக் கண் ணுற்றால், எதன்மேல் இந்தக் காலம் ஓடுகின்றது என்று ஆராய்ந்தறியவேண்டும். ஒவ்வொரு ஜீவனும் தற்காலத்தில் அதாவது நிகழ்காலத்தில் தான் தன்வாழ்வை உணர் கின்றான். நினைப்பால் இறந்த வேளைகளைக் கருதி இறக்கின் றான். மனோதர்மத்தால் எதிர்ந்துவரும் வேளைகளைக்கண்டு மகிழ்கின்றான், அல்லது அஞ்சுகின்றான். நிகழும் வேளையில் திகழ்கின்ற வேளைக்காரனை மறக்கின்றான். வாழும் தெய் வத்தை நிகழும் வேளையில் நினைந்து நினைந்து அன்பாய் உணர்ந்து ஆர்வத்துடன் பாடியாடிக்கொண்டாடி, காலா தீதமானதும், மூவகைக் காலத்துக்கு ஆதாரமானதுமான பொருளைநாடி ஆனந்தமுறும் நிகழ்ச்சியே பஜனை. நிகழும் கால உணர்ச்சியை மறந்தால், இறந்தகாலம் எதிர்காலம் இரண்டும் இறந்துவிடுகின்றன. எதிர்கால நிகழ்ச்சியின் ஆசையும் இறந்தகால நிகழ்ச்சிகளால் வரும் பயமும் தாண்டி, கால உணர்வற்று, ஆனந்தமயமான கடவுள் தத்துவத்தில் நிலைபெற்று நிற்பதே பஜனையாகும். இதுதான் ஆத்மானுபவம். இந்த இடத்தில் எல்லாப் பேதங்களும் மடிகின்றன. எல்லாம் கடவுள். “ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே, உலகனைத்தும் ஒன்றுமே.” ஆனந்தத்தையும் சன்மார்க்கத்தையும் வளர்க்கும் செல்வம் இதுவே.

ஆனால் மேலே சொன்ன உணர்ச்சியை யடைந்தா லொழிய பஜனையின் பலனை அடைந்ததாகாது. செய்த

பஜனையின் முயற்சி என்றும் வீண்போகாது. ஆயினும், அடையவேண்டிய பொருள், பஜனையின் குறி, இதுதான். இதை அடைவதற்கு இரண்டு இன்றியமையாத கருவிகள் உண்டு. அவைகளைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். உலகுக்கெல்லாம் தெய்வம் ஒன்றென்ற நம்பிக்கை வேண்டும். அந்தத் தெய்வத்தின் அருளைப் பஜனையினால், கருத்தின் ஊக்கத்தினால் நாம் அடையலாம் என்ற திடமான பக்தியும் வேண்டும். ஆண்டவன் உலகுக்கு ஒன்றே என்று எல்லாமதங்களும் கதறுகின்றன. ஆயினும், நாம பேதங்கள், அபேதமாய் ஏகமாய் நின்ற பொருளைக் குறிக்கின்றன என உணராது, மதச்சண்டைகளிலும் சச்சரவுகளிலும் மனதைச் செல்லவிட்டால் பலன் கிட்டுகிறதில்லை. உகந்த நாமத்தால் போற்றி அடையலாம். மற்றைய நாமங்களிலும் முறைகளிலும் த்வேஷமும் வெறுப்பும் இருத்தலாகாது. சமயம் கடந்த மோன சமரஸமென்று பாடினார் தாயுமானார். உயிருக்குயிராய் எங்கும் நிறைந்த ஆண்டவன் உன் உள்ளத்தில் உறைகின்றான். உன் உணர்ச்சியில் கொண்டுவர ஒரு மிக எளியவழி பஜனை. ஆண்டவன் உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டவன். கருத்தினில் கர்ப்பமாய்த்தரிப்பவன். கண்ணைக் கொடுத்து, தான் காட்சியாய் நிற்பவன். எண்ணங்களுக்கெல்லாம் உதிக்கும் இடம்தான் அவன். பேச்சைக் கடந்ததும், உரை, பிறந்த தத்துவமும் அவன். ஸ்ருதி, சங்கீதம், லயம், இவைகளின் உறைவிடம். ஒன்றாகிப் பலவாகக் கண்ட ஒளி. பண்ணும் பாடலும் அவனே. ஆகையால்தான் பஜனையில் ஈடுபட்டுத் தெய்வத்தை நாடுவோர், கலைஞானம் ஆத்மஞானம் எல்லாம் உதிக்கப் பெறுகின்றார்கள். செந்தமிழ் வாசகத்தால், இன்னிசைப் பண்களில் தத்வ ஞானம் நிறைந்த புகழ்ப்பாக்களால் ஆண்டவனை வழிபடுதல் தென்னாட்டுப் பஜனையின் சிறப்பு.

எவ்வளவு ஏராளமாய்ப் பக்தர்கள் பஜனையில் கூடினும், மனம் ஒன்றே அன்றோ. எல்லா மனமும் ஆண்டவனிடத்

தில் குவிந்திருக்க, ஒருவரேயன்றி வேறல்ல என்ற உணர்ச்சி கைகூடுகின்றது. ஆகவேதான் சங்கத்து அங்கத்தினர்கள் ஆயிரம் இருந்தாலும், பஜனையில் உணர்ச்சி ஏகாந்தம் தான். எல்லாம் முருகனாய் அல்லவோ நின்றுவிடுகிறது. மேலும் ஒருவனாய்த் தனியாய்ப் பஜனையில் தியானித்து நின்றால், பக்தர்கள் அனுபவம் வந்து தாக்குகையால், ஏகாந்தத்தில் ஸத்ஸங்கத்தின் உணர்ச்சியைப் பெறுகின்றோம். பட்டினத்தார், ஔவையார், அருணகிரியார், தாயுமானார், வள்ளலார் மற்றும் எல்லாப் பெரியோர்களுடன் பஜனை நடக்கிறதே யன்றி ஏகாந்தமில்லையே. ஏகாந்தத்தில் ஸத்ஸங்கமும் ஸத்ஸங்கத்தில் ஏகாந்தமுமாக அநுபூதி கொடுப்பது பஜனை. முருகன் நாவினின்று பாடுவான். வடிவும் தனமும் மனமும் குணமும் குடியும் குலமும் ஒருங்கே வந்து அடைகின்றன. காலங்கடந்த அநுபூதியில் தேக்கித் திளைக்க நம் உயிர் உடல் உணர்ச்சி எல்லாம் ஒருங்க ஏற்றுகின்றது பஜனைதான். பஜனை செய்யுங்கள். அன்பு செய்புங்கள். சேவை செய்யுங்கள். எல்லாம் தெய்வமென்ற உணர்ச்சியுள் கூடுங்கள். வீடு எனும் பெரும் பதத்தில் வாழுங்கள். பேதம், கொடூரம், ஆசாபாசம், ஆணவம் எல்லாம் நம்மைவிட்டு நழுவிவிடும். இதுதான் பஜனையின் தத்துவம். இதைத்தான் எளிதான மார்க்கமெனப் பெரியோர்கள் உபதேசிப்பதும்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகும் செயல் தந்து உணர்வென்றருள்வாய்.

என்றார்—அருணகிரியும். பஜனை செய்யும் பெருந்திரு அடியார் கூட்டத்திற்கு என்றும் மங்களம்.

நற்பெருந் தெய்வம்

(இளவழகனுர்)

தமிழ் நாடு ஓர் இனிய நாடு. கடல்வளம், மலைவளம், நிலவளம், கான்வளம் எனப் பல வளங்களும் பொருந்திய திருநாடு. பொருட் செழிப்பும், கலைச் சிறப்பும், அருட் பெருக்கும் ஒருங்கு கொழிக்குந் தேன் நாடு.

தனி அரசு, தனி மொழி, தனிக் கலை, தனி அறம், தனி நெறி கண்டெடுத்த தனி நாடும் இது.

முடி மன்னர், நில மன்னர், நல் லமைச்சர், தூதர், ஒற்றர், வீரர், வீரத் தாயர், பல்வகைத் தொழிலர், நன்னெறிக் கலைஞர், நுண்பெரும் புலவர், அறவோர், துறவோர், கற்பின் மகளிர், தொண்டர் முதலிய நல்லோர் பற்பல பிரிவினர் அளவிலராய்ப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பெருக வாழ்ந்து, மிக விளங்கி, நனி நாகரிகம் பரப்பிய சீறநாடும் இது. தெய்வநலந் தெருட்டிய அருள்நாடும் இது!

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்குங் காணேம்' என்று பாரதியார்வியந்து கூறுகின்றார். ஆகவே, 'யாம் அறிந்த நாடுகளில் தமிழகம் போல் இனிதாவது எங்கும் காணேம்' என்பதும் அதனுல் பெறப்படுகின்றது.

அதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். அவற்றுள் இந் நாட்டுத் தெய்வ மாதரார் மாட்சியும் ஒரு பெருங் காரணமாகும்.

'நற்பெருந் தெய்வம்' என்பது, தமிழ் நாட்டில், சிறந்த செல்வர் ஒருவர் தம் அருமை மனைவியாரை அஞ்சி வியந்து சொன்னசொல்! அவர், சொல்லோடு நிற்கவில்லை.

"மானுடம் இவர்தாம் அல்லர்; நற்பெருந் தெய்வம்;
பொற்பதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின்"

என்று தாம் பணிந்ததேயன்றி, அருகிலிருந்தாரையும் அவரைப் பணியுமாறு ஏவினுர்

கணவனை மனைவி வணங்குதல்பற்றிக் கேட்டிருக்கக் கூடும். மனைவியைக் கணவன் வணங்குதலென்பது ஒரு புரட்சியான செயல். அறிவறிந்த உண்மைக்குமுன், இனம் மதம் மொழி நாடு பழக்கம் வழக்கம் மரபு முதலிய பிற எவையும் தலை நிமிர்வதில்லை; பணிந்து, உண்மையின் வழியாய் ஒழுகுவதே இயல்பு. ஆடவராய் இருக்கட்டும், மாதராய் இருக்கட்டும்; மேலோராய் இருக்கட்டும்; கீழோராய் இருக்கட்டும்; பிறர் எவராய் இருக்கட்டும்; உண்மை எங்கே விளங்குகின்றதோ அங்கே அதற்கு மதித்திணங்கி ஒழுகுதல் தமிழ்ப் பண்பு! 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றது தமிழ் மறை.

'காரைக்கால் அம்மையார்' என்னும் புனிதவதியார், மாதருக்குள்—ஏன், மாந்தருக்குள்—ஒரு தெய்வம்! அவர். தம் கணவனும் தம்மை வணங்கும் நிலையில் விளங்கினார், அவ் வம்மையாரால், தமிழகம் ஒரு பெரும் புரட்சியும் பெருமையும் பெற்று உலக அரங்கில் மாட்சியுற்றது

நம் நாட்டு மாதரின் தெய்வ நலம், பலப்பல பிரிவுகளில் விளங்கி மிளிர்ந்தது.

'ஔவையார்' சிறந்த கல்விநலமும் சான்றாண்மையும் வாய்ந்து, தமிழகமெங்கும் உலவி, நல்லுணர்வு பெருக்கினார்.

'வீரமாது கண்ணகியம்மை' சோழநாட்டிற் பிறந்து கற்புக் காத்து, பாண்டிநாடு புகுந்து நெறி தவறிய அரசைத் தம் கற்பின் ஆற்றலால் எதிர்த்துப் புரட்சிசெய்து வென்று, சேரநாடு சென்று கற்புத் தெய்வமானார்.

'திலகவதியாரும்' 'மங்கையர்க் கரசியாரும்,' இடுக்கண்நேர்ந்த காலங்களிலும் தம் பெருங்கற்பும் தெய்வவுணர்வுங் காத்துநின்று, அவ்வாறு தம்மைப்போல் நில்லாது தெய்வ நெறியிலிருந்து வழுவிய தம் தம்பியாரையும் கணவரையும் மீண்டும் நெறிநிறுவி நலம்புரிந்து, உலகு தொழ விளங்கினர்.

‘காரைக்கால் அம்மையாரின்’ தெய்வநிலை, இவரனைவரினும் மிக ஓங்கியதாய் மிளிர்கின்றது. சோழநாட்டிற் பிறந்து அருளுணர்வும் அடியார்ப்பணியும் அருட்பேறும் பெற்றுப், பாண்டிநாடு சென்று தம் கணவனும் உலகமும் தம்மைத் தொழ உலகமேயன்றித் தம் உடலெழிலும் முற்றத் துறந்து, பின் வடநாடு சென்று திருக்கயிலை சார்ந்து ‘அம்மையே’ என்று இறைவனே பரிந்தழைக்கும் பெரும்பேறு வாய்ந்து, அப் பெம்மான்பாற் பிறவாவரம் எய்திக், கடைசியில், தொண்டைநாடு சேர்ந்து ‘திருவாலங்காடு’ என்னுந் திருப்பதியில் பெருமான் வெற்றித் திருநடனங் கண்டுகொண்டு, அவன் ஆடுங் காலங்களில் தாம் பாடிக்கொண்டு, அவர் நிழலிலேயே அங்கு நாளுந் தங்கியிருக்கும் பெருவாழ்வு பெற்றார்.

இந்த மாட்சிமையோடு, அம்மையார், மிக்க பேராசிரியையுமாய் ஓங்கினார். செந்தமிழ் வளங் கொழும, நுண்பொருள் வளந் துறும, அருள்மணக் கவின் கமழ மிக அழகிய தெய்வக் கவிதைகளையும் இடையிடையே பொழிந்து, தமிழுள்ளமெலாம் குளிரச் செய்தார். தமிழகம் இவ்வம்மையாராற் பெற்ற இனிமை பெரிது.

பண்டைக் காலத்தில் ‘கரிகாலன்’ முதலிய முடிமன்னர், இமயத் தாழ்வரைகாறுஞ் சென்றமை கேட்டிருக்கின்றோம். ‘திருநாவுக்கரசர்’ இமயத் தாழ்வரையின்மேலும் தம்மால் முடிந்தமட்டும் கடந்தமை அறிகின்றோம். நம்பியாரூரரும் ‘சேரமான் பெருமாள் நாயனாரும்’ யோக வல்லமையால் வான்வழியாகத் திருக்கயிலை மலை நண்ணினமை உணர்கின்றோம்.

ஆனால், காரைக்கா லம்மையாரைப்போல், வடநாடும் இமயமலையும் திருக்கயிலைத் தாழ்வரையும் நடந்தேகடந்து, பின்பு, கயிலைத் திருப்படியையுந் தலையால் நடந்து, எல்லாம் வல்ல அம்மையப்பர் இருக்கையை எய்தின அரும்பெருஞ் செயலை என்றுங் கேட்டிலோம்.

இவ் வம்மையின் பெருமைகளை நாம் சற்று விரிவாக எண்ணி இன்புறுதல் நல்லது.

“ஆதியோடு அந்தம் இல்லான் அருள்நடம் ஆடும்போது
கீதம் முன் பாடும் அம்மை கிளர் ஒளி மலர்த்தாள் போற்றி!”

இன்பம்

[D. இராமசாமி அய்யங்கார்]

உலகமக்களனைவரும் ஒருங்கே விரும்புவது இன்பமொன்றுதான், இன்பம் இருவகைப்படும்; சிற்றின்பமென்றும் பேரின்பமென்றும். சிற்றின்பமாவது உலகப் பொருள்களிடமிருந்து நம்பொறிகள் (இந்திரியங்கள்) வாயிலாக நாம் அடையக்கூடிய சுகம். இது மக்களுக்கு மட்டுமன்றி ஜந்துக்களுக்கும் கிடைக்கக்கூடியது. பேரின்பமென்பது ஆத்மஸ்வருபத்திற்கு முக்கிய லக்ஷணமான அறிவினுடைய விகாசத்தால் (மலர்ச்சியால்) பரமாத்மாவிடமிருந்து அடையக்கூடிய இன்பம். சிற்றின்பத்திற்கு கருவிகள் இந்திரியங்கள், பேரின்பத்திற்கு ஸாதனம் ஞானம் ,அல்லது அறிவு அசேதனப்பொருள்களிடமிருந்து பெறக்கூடியது சிற்றின்பம். பரம்பொருள் ஒன்றினிடத்தே நுகரக்கூடியது பேரின்பம். பேரின்பத்தின் இருப்பும் இயற்கையும் உணரப்படாதவரையில்தான் சிற்றின்பத்தில் விருப்பம் தொடர்ந்துவரும். யாதானுமொரு நற்றவப்பயனுல், அல்லது ஒரு மெய்யடியாரது கருணை மிகுந்த நல்லுபதேசத்தால் நமதுள்ளத்தில் பேரின்பத்தினிடத்து அவா தூண்டப்பட்டால், அப்புறம் சிற்றின்பத்திடத்து மனம் நாடாது அழகு பொருந்திய ஓர் அரசிளங்குமரியை மணந்த பின்னர் முன்பு சிறையிலிருந்த போது பார்த்த ஒரு பணிப்பெண்ணிடத்தில் மனம் செல்லாததுபோல இந்த உணர்ச்சியை, இந்த அநுபவத்தை நம்மாழ்வார் பின்வரும் பாசுரத்தால் பேசுகிறார்.

''கண்டு கேட்டு உற்று மோந்து
உண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம், தெரிவரிய
அளவில்லாச்சிற்றின்பம்
ஒண்டொடியாள் திருமகளும்
நீயுமே நிலா நிற்பக்
கண்ட சதிர்கண் டொழிந்தேன்
அடைந்தேன் உன் திருவடியே.

(திருவாய்மொழி 4-9-10)

பாவவினையற்று ஞமநினை புத்தி

இங்கே ஐங்கருவி கண்ட இன்பம் சப்தாதி விஷய சுகமான சிற்றின்பத்தைக்குறிக்கிறது அதற்குமேல், தெரிவரிய அளவில்லாச்சிற்றின்பம்'' என்று ஒன்று பேசப்பட்டிருக்கிறது. அது கைவல்யம் என்று சொல்லப்படும் கேவல ஆத்மானுபவம் என்று பெரியோர்கள் அபிப்பிராயம். அதுவும் கூட கடவுளிடத்தில் ஒருவனுக்கு ஏற்படக்கூடிய இன்பத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், சிற்றின்பம்போலவே தாழ்ந்தது நிலையற்றது என்பது மெய்யடியார்கள் கண்டறிந்த உண்மை விஷ்ணுவையோ, சிவனையோ, பராசக்தியையோ, முருகக்கடவுளையோ பரம்பொருளாகக்கருதி அத்தெய்வத்தினிடத்து அன்பு பூண்டு ஆனந்தமெய்தி இன்பம் நுகரும். ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்கசுவாமிகள் இவர்களது அருள் மொழிகளிலிருந்தும், அமிர்தவசனங்களிலிருந்தும் பேரின்பம் அவர்களை எப்படி ஆட்கொண்டது என்று நன்கு அறியலாம்.

"மாசில்வீணையும், மாலை மதியமும் வீசுதென்றலும், வீங்கிள வேனிலும் மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்ற தேவாரத்தைச் சற்று ஊன்றி அனுபவியுங்கள். சரீரதாபத்தைப் போக்கி இன்ப சுகம் தரவல்ல பொருள்களையெல்லாம் ஒன்று சேர்த்து அவையனைத்தும் நல்கக்கூடிய இன்பத்தையெல்லாம் திரட்டி, ஈசனுடைய இணையடியில் கூட்டி அனுபவிக்கும் அனுபவம் எவ்வளவு அழகு. காலம் வஸந்தகாலம் (வீங்கிளவேனில்) பிரதேசம்; ஒரு சோலையில் ரமணீயமாக வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும் ஒரு தாமரைப் பொய்கை; வேளை; மாலைப்பொழுது— பூரண சந்திரோதயமாகி யிருக்கிறது. அருமையான தென்றல் காற்று அப்பொழுதுதான் நன்கு புஷ்பித்த மல்லிகைகளின் பரிமளங்களை யுண்டு மெல்ல மெல்லத் தவழ்ந்து வருகிறது. அக்காற்றினிலே மிதந்து வரும் இன்னிசையாழினின் றெழுந்த அத்புதகீதம்!—இத்தனையும் ஒருங்கே அமையப்பெற்றபோது, எத்தனை இன்பம் ஏற்படும்! அவ்வளவு இன்பமும் ஈசனது இணையடி நிழலில் மெய்யடியார் எய்துகின்றனராம். தேகத்திற்கு மட்டும்

ஆனந்தமும் குளிர்ச்சியும் ஸாமான்ய மனிதர்களுக்கு ஏற்படுமாயின், ஈசன்பால் அன்பு பூண்டபேர்களுக்கு தேகத்துக்கும் ஆத்மாவுக்கும் சொல்ல வொண்ணுச்சுகம் விளையும். நாமெல்லோரும் ஆத்மாவை வெயிலிலே உலர்த்தி தேகத்திற்கு மட்டும் நிழல் தேடுகிறோம், பக்தர்கள் நிலை அப்படிப்பட்டதன்று. நெடுங்காலம் தெய்வத்தைவிட்டுப் பிரிந்து ஸம்ஸாரம், பிறவியென்கிற பாலை வனத்தில் தபித்து வாடியவர்களெனத் தம்மை மதிப்பவர்களாகையால், அவர்களுடைய ஆத்மவிடாய், நம்விடாயினும் பெரிது. அப்பெருவிடாய்க்கு அவனடியில்தான் ஆச்வாஸம், ஆனந்தம். அந்த இன்பம் தான் அவர்கள் கண்டறிந்து நமக்குக்காட்டுவது. நாம் உலகரீதியில் எதெது இனிக்கிற தென்கிறோமோ அதற்கெல்லாம் மேற்பட்ட இனிமையை சுந்தரமூர்த்தி நாயனுர் திருவிடை மருதூர் வாழும் ஐயனிடத்தில் கண்டு அனுபவித்து ஆனந்தித்து அதை நமக்கு போதிக்கிறுர். 'கனியினும் கட்டிப்பட்ட கரும்பினும் பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும் தனி முடிகவித்தாளும் அரசிலும் இனியன் தொண்டர்க்கு, இடை மருதூரனே''.

எனக்கு இனிக்க வில்லையே என்று ஒருவன் கூறுவானுயின், நீ தொண்டுபட்டு நின்றுயோ, அவன்தாமரைத் தாள்களுக்கு என்று வினவுவர்போல் ''இனியன்தொண்டர்க்கு'' என்று அழகாகப்பாடுகிறுர். ஆண்டவர்க்குத் தொண்டு பூண்டு நிற்பதில் அவ்வளவு இன்பத்தைக்கண்டவர்கள் நம பூர்வர்கள். எம்பெருமானும் அவர்களுக்கு விஷேச இன்பத்தை அளிக்கிறுன். அவர்களுக்கு தேனும் பாலும் அன்னலும் அமுது மாகித்தித்திக்கிறுன், ''எத்திக்கும் தித்திக்கும் இன்பமே'' என்று அவர்களைப்பாடவைக்கிறுன்.

அத்தகையபேரின்பம் நமக்கும் எட்டியுள்ளது. நாமும் அவன் தாளிலும் அவன் தொண்டர் பொற்றுளிலும் அடிமை பூண்டு நின்றோமானுல் இவ்வுலகிலேயே இப்பிறவியிலேயே நமக்கு எட்ட வொண்ணுப் பேரின்பமெல்லாம் எட்டும். பலசுவைகளையும் சுவைக்கப்பாடுபட்டு வரும் நாம் எம்பெருமான் அடிகளில் தொண்டுச் சுவையைப்

வாடுமெனேழத்தி நீடியபதத்தில்

பற்றி நின்றால் இம்மையும் மறுமையும் ஒருங்கே அடைந்து எங்கும் திருவருள் பெற்று இன்புறுவோம். சிற்றின்பத்தின் சுவை ஊறிக்கிடக்கும் நமக்கெல்லாம் பேரின்பத்தில் ஆசை ஏற்படவும் அதற்கு மெய்ப்பாடு படவும், அது நமக்குக்கிடைக்கவும் ஆண்டவன் இன்னருள் புரிவானாக!

அடியார் கூட்டம்

(ஸ்ரீரமணா)

இருக்குமறை விரிக்குமுறை யீன்றோர்க் கீந்து
கருக்குவியல் கறுக்குமியல் கைவேலேந்த
தருக்குமறத் தருக்கமறந் துவக்குமுன்னத
திருகருமான் திருக்குமரன் இணைத்தாள்போற்றி.

அடியார் யார்? ஸர்வ ஸ்வதந்த்ரனாயிருக்கும் ஸர்வேச்வரனை, தம் அன்புக் கயிற்றால் கட்டி அவனைப் பாதந்த்ரனாக்கி அடிமை கொள்பவர்களுக்கு 'அடியார்' எனப் பெயரிடுவது, காராட்டை வெள்ளாடு என்றும், மிகக் கொடிய பாம்பை நல்ல பாம்பு என்றும் குறிப்பதுபோல் இருக்கிறதல்லவா! ஈசனை வாசல் காப்பவனும் வைத்துக்கொண்டான் ஓர் அடியான்; பெண்ணாசையை விட்டவர்க்குத்தான் வீடளிப்பேன்' என்று மறையோதிய பரமனையே தன் காதலியின் கோபம் தணிக்கும் தூதனாக்கினான் ஒருவன். என் சிஷ்யன் ஊரைவிட்டு அரசன் ஆணையால் போகின்றான்; நானும் அவனோடு போகிறேன்; நீயும் வந்தாகவேண்டும் என்று பரந்தாமனை இழுத்துப் போனான் வேறொருவன்; 'உன் சொல்லைக்கேட்டுத்தான் அரசன் பொருளை, அவன் சொன்ன காரியத்துக்காக அல்லாமல், வேறு வழியில செலவழித்துவிட்டேன்; இனி நீ என்னைக் காப்பாற்றினால் காப்பாற்று, இல்லையேல் உன்னை எல்லாரும் இகழட்டும்; எனக்கென்னவாம்' என்று தூண்டிவிட்டு குதிரைக்காரனாகவும் மண் ஓட்டனாகவும் அலையவைத்தான் ஈசனை ஒருவன். இப்படி இவர்கள் கூட்டமே அலாதி.

இவர்கள் செயலோ பிறரால் புரிந்துகொள்ள இயலாதது! சொந்தப் பிள்ளையை வெட்டிவிடுவான் ஒருவன். காதல் மனைவியையே தானம் செய்துவிடுவான் மற்றொருவன். தந்தையென்றும் பாராது காலைவெட்டுவான் ஒருவன். ஈசனைக் கல்லாலடிப்பானும் வில்லாலடிப்பானுமிவரிடையுண்டு; அவருக்கு உதவி செய்வதாகக் கூறித் தன் சேனைக்குத் தன்னோடுவரக் கடுங்கட்டளை பிறப்பித்து விட்டுத் தானும் சமுத்திரத்தில் இறங்குவான் ஒருவன். இவர்கள் போக்கே ஒருதனிப்பட்டது.

குரங்குக் குட்டி, தாயைப்பற்றிக்கொண்டே இருப்பதுபோல் ஈசனை விடாமல் பிடித்துக்கொண்டு அழுது புலம்பி அருள் வேண்டுவர் இவர்களில் சிலர். வேறு சிலரோ, அவனே வந்து அருள் செய்யட்டுமே என்று பூனைக்குட்டிபோல, தன்னைவிட்ட இடத்தைவிட்டு நகராது கிடப்பர். இவர்களுக்கு இடையில் தாங்களாக சிலசமயம் முயன்றும், கடவுளே சிலதரம் இரங்கியும் அருள் பெறுவோருண்டு—'கங்காரு' என்னும் மிருகத்தின் குட்டி போல—அவர்களுக்கு எப்போதும் ஒரு தனியிடம் தயாராயிருக்கும்.

இப்படிப்பட்ட அடியார்களைப்பற்றிப் பலர் தத்தம் அநுபவங்களை வெளியிட்டுள்ளனர். ஈசனை நேரே அணுகமுடியாத் அநேகர் இவ்வடியார்களுக்கு ஏவல் புரிந்து, அவர்களை மகிழ்வித்து அவர்கள் மூலம் ஈசனை வெகு சுலபமாய்த் தரிசித்திருக்கின்றனர். இந்த ரகசியத்தைத்தான் "அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கிவிட்டு விட்டால், இன்பநிலை தானேவந்தெய்தும் பராபரமே" என்று கூறியிருக்கிறார் ஒரு பெரியார்.

ஈசனைப் போற்றும் பெரியார் பலர், 'நேரில், உன்னை நானோ, என்னை நீயோ சந்திக்க வழிசெய்யாவிட்டாலும், உன் அடியார் கூட்டத்தில் சேர்த்துவிடு, என வேண்டுவர். இவ்வேண்டுகோள் எல்லோருக்கும் பொருத்தமானது. ஒரு சிறு விஷயம் கவனிப்போம். உலகத்தில் தினசரி நாம் செலாவணி செய்யும் சில்லரைக் காசுகளில் சில தேய்ந்து செல்லாக் காசாவதுண்டு. அதனைக்

கைமாற்றுவது கடினம். ஆனால் அதே காசு, இன்னும் சில ரூபாய்ச் சில்லரைகளோடு சேர்த்து எண்ணித்தரப்படுமானால் கைமாறிப் போய்விடும். ஆதலின் தனியே எண்ணில் சற்றும் குறிக்கொள்ள லாகாதவனும் அடியார் கூட்டத்தில் சேர்ந்துவிட்டால் அவர்களோடு சேர்த்தெண்ணப்பட்டுப் பெரும்பேறு அடைதலாகும்; அப்படிப்பட்ட, ஸ்பர்சவேதி போன்ற, தன்மைவாய்ந்தவர் அடியார்கள் - பக்தர்கள். எனவே,

'தனியே ஒருவர் கைதன்னில் தந்தால் வாங்காச் செல்லாத
இனிய காசும் சில்லரையாய் இரண்டொரு ரூபாய்க் கியுங்கால்
நினையா விதமாய்க் கைமாறும் நிலைத்த அடியாரிடை கிரப்பித்
தனியாய் எண்ணு வகைசேர்த்துத் தடுத்தாட்கொள்வாய் என்தாயே'

என்று ஜகன்மாதாவைப் பணிந்து வேண்டுவோமாக.

வைஷ்ணவர் செல்வம். (இரண்டாவதுபை.)

[வெங்கடராம சாஸ்திரி]

நெஞ்சால், நினைப்பரி, தால்வெண்ணெய், ஊண் என்னும் ஈன் அச் சொல்லே.

"அமிர்தவசனி"யின் சித்திரை முகப்பிதழ் ஓவியத்தின் அடிக் குறிப்பிற்கண்ட "நவநீதமுந்திருடி" என்ற அருணகிரி ஆண்ட அருந்தொடர், மேற்குறித்த முகப்பின் பொருளோடு ஆழ்ந்த ஓர் பொருளும் அகப்படுத்திக் கொண்டு இருப்பது அகம் மகிழ்தற் குரியது.

"உஷ்ணத்தால் வெண்ணெய் உருகும். பக்தியாகிய சூட்டினால் மனமாகிய வெண்ணெயும் உருகும்" என்ற தனது அந்தரங்கக் கருத்தினை வெண்ணெய்த்திருட்டு விளையாட்டால் கண்ணபிரான் வெளிப்படுத்தினாரவர். அக கண்ணனது, வெண்ணெய் ஊண் (வெண்ணெயை யுண்பது.) என்றுசொல்லும் இவ்வுலகத்தான அச் சொல் நெஞ்சால் நினைக்கமுடியாத அளப்படுங் கருணைவடிவத்தைக் காட்டுகின்றது என்கிறார் நம்மாழ்வார்.

தான்தா நினைத்து வாவேணும்

பகவானது கருணை ஒரு சமயத்தில் துஷ்டருக்குங்கூட மனம் இரங்கச் செய்துவிடுகிறது. முதற் குழந்தையைத் தன்வாக்கின்படியே கொண்டுவந்து கொடுத்த வசுதேவரைப்பார்த்துக் கம்ஸன் "இந்தக் குழந்தை எனக்கு யமனல்ல. எட்டாவது குழந்தையாலன்றோ எனக்குச் சாவு விதிக்கப்பட்டுளது," கொண்டுபோம் என்றான்.

காலநேமி அசுரனது உடல் கழன்றுபோகவும், அக் காலநேமியின் நினைவு தன்மனத்தைவிட்டுக் கழலாமலிருக்க, எரிகிற நெருப்பில் நெய் வார்த்தாற்போல நாரதர்வந்து "கோபாலரும் யாதவரும் உன்னைச் சேர்ந்தவரும் தேவரே" "திருமால் பூபாரந் தீர்க்கச் சனிப்பார்" என்று தூபமும் போட்டுவிட அக் கம்ஸன் தேவகி வசுதேவர்களை விலங்கிட்டு வீட்டிலேயே அடைத்து ஓர் எட்டுப் பொருள்களில் எதுவும் எட்டாகலாம் என்ற எண்ணத்துடன், வசுதேவாது முதல் ஆறுகுழந்தைகளையும், கொன்று பிரலம்ப பக சாணூர திருணாவர்த்த அக, முஷ்டிக, அரிஷ்ட, த்விவித, பூதனை கேசி கூதனுக பாண நரகாசுரர்களுடன் யாதவர்களைத் துன்புறுத்தினனாகத்

"தனிப்பெரு மூர்த்திதன்மாயம் செவ்வே
நெஞ்சால் நினைப்பரிதால்" எனச் சொல்ல மனம்

நெகிழ்கிறது. பகவான் யோகமாயைக்கிட்ட கட்டளை என்னே! என்னே! நந்தகோகுலஞ் செல். அங்கிருக்கும் வசுதேவர் மனைவியான ரோகிணியின் வயிற்றில் தேவகியின வயிற்றிலிருக்கும் ஏழாவது கர்ப்பத்தை ஆக்ருஷ்ணஞ்செய்து வைத்துவிடு. நான் தேவகி மகனாவேன். நீ யசோதை என்ற நந்தகோபர் பத்தினியிடம் பெண் குழந்தையாகப் பிறந்துவிடு. மாயந்தானே.

யோகமாயை பகவானது ஆக்ஞைகளை அங்ஙனமே பூமியில் நிறைவேற்றிவிட, யோகமாயைதந்த நித்திரையினால் தேவகிக்கும் நித்திரைவந்துவிட அவ்வேளையில் தேவகியின் ஏழாவது கர்ப்பம் ரோகிணியிடம் கொண்டுபோகப்பட, அடடா! தேவகியின் கர்ப்பம் கரைந்துவிட்டதென்று பட்டினத்துமக்கள் வாய்விட்டலற--ஸமஸ்த ஜீவன்களுக்கும், பக்தர்கட்கும் அஞ்சல் என்று அருள்பவனும், விசவரூபனும், விசவம்பரனும், ஆகியபகவான் பாலகோபால லீலையில் வெண்ணெய்த் திருட்டு விளையாட்டு ஒன்றையும் "அன்பர்

ஞானவுணர்வற்று நானேழுபிறப்பும்

ஞனம் கவர்பவர் நாம்'' என்பதை மெய்ப்பிக்க அயர்ந்திடுவோம். இப்போது இவ் வசுதேவரது மனமாகிய வெண்ணெயை விழுங்குவோம் என்று திருவுளங்கொண்டு, பரிபூர்ணரூபத்துடன் வசுதேவருடைய மனதில் ஜகன்மங்கள மோகன சுந்தரரூபியாக ஆவிர்ப்பவித்தார். அவ் வசுதேவர் மனத்தில் திருமால் தங்கிவிடவே புண்ணியதீபனமும், பாவத்தின் க்ஷாரமும் ஏற்படத் தீக்ஷைபெற்றுத் தம் மனைவியாகியதேவகிக்கு, மனோதீக்ஷையுந்தந்து அவள் வயிற்றை உலகளந்தானுக்கு இருப்பிடமும் ஆக்கி அருளினார் அவ் வசுதேவர்.

தனிப்பெரு மூர்த்திதன் மாயம் செவ்வே
நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெய் ஊண்

என்னும் ஈனச்சொல்லே, என்ற நம்மாழ்வார் வசுதேவர் மனத்தில் பகவான் ஆவிர்ப்பவித்ததனைத் தாமும் நினைந்து தன்னுள்ளந் திறந்து "பகவான் மனமாகிய வெண்ணெயை விழுங்கிவிட்டால், (நெஞ்சொன்று இருந்தால்தானே நினைக்கவழி) நினைப்பது அரிதே என்ற தத்துவமாம் மோனநிலையைக் குறிப்பித்தருளினார்.

' நவநீதமுந்திருடி '' என்ற தொடரில் நவநீதம் என்பது, ஜயங்கவீனம் என்பதான நேற்று இரவு தோய்ந்த தயிரை இன்று காலையில் கடைந்து எடுத்ததான புதுவெண்ணெய் என்ற பொருள் தந்து பழவடியார்களுடைய மனங்கவர்ந்ததுபோலப் பத்தம்புத்தடியாருடைய மனமாகிய வெண்ணெயையும் திருடிவிடுவான் அக் கண்ணன் என்னும் ஆழ்ந்த பொருளையும் குறிப்பிக்க வாக்கிற் கருணகிரியார் அப் பொன்மணி மொழியையும் வாய்ப்புறவைத் தருளினர். என்னே அவன்றன் மாயம்.!

அகப் பண்பாடும் அடியார் திருக்கூட்டமும்

(மதூர் ராமரத்னம், B. A.)

திருவாளர் முத்துஸ்வாமி ஐயர் அவர்கள் என்மீதுள்ள அன்பினால் என்னை "அடியார் ஞாயிறு திருக்கூட்டம்" என்ற குழுவிற்கு ஒரு ஊழியனாக இருக்கும்படிப் பணித்தார். அமிர்த வசனியின் மூலம் அடியார்களுடன் ஆத்மவிஷயங்களில் சம்பாஷனை நடத்தும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டிற்று. அது யான் செய்த பாக்கியம். நம்மிடையே ஒரு மஹான் நம் எல்லோரையும் உறக்கத்திலிருந்து எழுப்பி, இதுகாறும் நீவிர் காலத்தை வீண் போக்கியது போதும். இனியாவது தெய்வ வழிபாட்டில் ஈடுபடுங்கள்" என்று கூறலாயினார். நாம் எல்லோரும் அவர் காட்டும் வழியைப் பின் பற்றலானோம். எங்கு சென்றாலும் முருகா! முருகா! என்ற சப்தம் நம் காதில் இடையறாமல் ஒலிக்க லாயிற்று. 'கண்ணனே கந்தன்' எனும் ஐக்கிய பாவம் நம்மனதில் தோன்றலாயிற்று. வாழை யடிவாழையாக வந்த திருக்கூட்ட மரபினிலே தாமும் ஒருவராகத் திகழவேண்டும் என்ற அவா அடியார் உள்ளத்தை உந்துகின்றது. திருப்புகழ்த்தேனை யூட்டி யாவரையும் உய்விக்கும் 'மணி' எனும் மாண்பினான் நீடூழி வாழ்க! வென வாழ்த்துவோமாக.

இக்கட்டுரையில் ஜீவனின் தோற்றம், அதன் தன்மைகள், அதனைப் பண்படுத்தும் துறையில் அடியார் திருக்கூட்டத்தின் ஆற்றல் முதலிய விஷயங்கள் சுருக்கமாகக்கூறப்பட்டுள்ளன. வேதங்களில் (1) ஈஸ்வரன் (2) ஜீவன் (சித்) (3) பிரகிருதி (அசித்) என்ற மூன்று தத்வங்கள் கூறப்பட்டுள்ளன. மரம், பொன் போன்ற தனிப் பொருள் ஒவ்வொன்றினாலும் பலவகைப்பட்ட பொருள்கள் செய்யப் படுதல் போன்று இருபத்லைந்து தனிப்பொருள்களை பல விதப்பட்ட விகிதங்களில் கலப்பதினால்' இப்பிரபஞ்சத்தை ஈஸ்வரன் சிருஷ்டித்துள்ளான். அத்தனிப் பொருள்கள் பின் வருமாறு:—ஞானேந்திரியங்கள் 5; கர்மேந்திரியங்கள் 5; மனம்; பஞ்சபூதம் 5. இப்பஞ்ச பூதத்தின் தன்மாத்திரைகள் அல்லது நடு அவஸ்தைகள் 5; (பாலுடன் மோர்கலந்ததும் அது தயிராவ

ஆதிமுரு காதிமுரு காதிமுரு காளனவு

தற்கு முன் ஏற்படும், நடு அவஸ்தை போன்றது தன் மாத்திரை என்பது); பிரகிருதி; மகத்து; அஹங்காரம்; ஜீவாத்மா: ஆக மொத்தம் 25. இருபத்தாறுவது வஸ்து ஈஸ்வரன்.*

ஈஸ்வரன் இந்த 25 தனிப் பொருள்களையும் பஞ்சீகரணம் செய்து ஜெகத்தினை உற்பத்திசெய்துள்ளான். ஜெகத்தில் கால் பாகந்தான் சத்வ, ரஜோ, தமோ குணத்தோற்றம் உடையது. மற்றைய முக்கால் பாகம சத்வ குண மயமானது.

மேற்கூறியதிலிருந்து ஜீவன ஈஸவரனால் கையாளப்பட்ட ஓர் தனிப்பொருள் என்று தெரிகிறது இந்த ஜீவனை நாம் எவ்வாறு உணர்வது என்பது ஒரு கேள்வி. ஜீவன் ஒரு அகப் பொருள். ஒருவன் "நான்" என்று கூறினால் "நான்" என்பது சரீரத்தையோ, அதன் அவயவங்களையோ குறிக்காது. எனது கை, எனது கால், எனது உயிர், என்பதிலிருந்து சரீரம் "நான்" அல்ல என்பது விளங்கும். "நான்" எனபது மனதையும் குறிக்காது. "நான்" என்பது மனதை இயக்கும் ஒருசக்தியே ஒழிய "மனம்" அல்ல என்பது பின்காணும் உதாரணத்திலிருந்து விளங்கும். கசடறக் கற்ற ஒரு சீடனை குரு 15 நாள் பட்டினி கிடககச்செய்தார். பிறகு கற்ற விஷயங்களைக் கூறும்படிப் பணித்தார். ஆயினும் சீடன் உணவின்மையால் மெய்ப்புலன்கள் வாடி கற்ற வற்றை எடுத்து ஓத இயலாதவனானான். புதிய விஷயங்களையும் கிரஹிக்க சகதியற்றிருந்தான். கொஞ்சம் ஜலமும் உணவும் கொடுங்கள் பிறகு தான் எனது ஆற்றல் புலப்படும்' என்றான் சீடன். இதிலிருந்து மனம் என்பது பஞ்சபூதங்களின் விகாரம் என்பது விளங்கும். "நான்" என்பது மனதைக்காட்டிலும் வேறுபட்டது. 'எனக்கு' நீரும் உண்டியும், கொடுங்கள் என்று கேட்கச்செய்த சக்திதான் 'நான்' என்பது. அதுவே ஞானானந்த ஸ்வரூபம், அறிவு, ஜீவன், ஆத்மா என்று பல வாகக் கூறப்படும்.

சரீரத்துடன் சம்பந்தப் பட்ட ஆத்மாவானது இந்திரியங்களால் இயக்கப்படும் மனதுடன் ஒன்றாகச் சேர்ந்து ஒழுகும் பொழுது தனது தனிப்பட்ட தெய்வீக சக்தியை இழந்து மனச் சக்திகுக் கீழ்பட்டு விழுகிறது. இதனைப் பகுத்தறிந்து புற இயக்கத்தைக குறைத்தால் மிருகததன்மை ஒழிந்து தெய்வீக குணங்கள் ஒளிவிட்டுத திகழும். இந்நிலையில் மனிதன் தேவனாகிறான். மனச் சக்திக்கு அடங்கினால் மிருகத்தன்மை மேலோஙகும் மனிதன் மிருக நிலையை அடைகிறான். ஆத்மசக்தியை அதிகப்படுத்தும் முறையைப் பற்றித்தான் சகல வேதாந்தங்களும் கூறுகின்றன.

மாதிமுரு காநினைவு தருவாயே

ஆத்மாவை சரீர பந்தத்திலிருந்து விடுவிப்பதற்கு உபாசனையே முக்கியவழி. எல்லா உபாசனைக்கும் உயிர்போன்றது பக்தி. பக்தி உறுதி பெற சத்சங்கம் அவசியம். அத்தகைய சத்சங்கமே அடியார் உறவு அல்லது திருக்கூட்டம் என்பது..

எத்தகைய அடியார் திருக்கூட்டத்திலும் சமரச மனப்பான்மையைத் தவிர வேறொன்றுக்கும் இடமில்லை. எல்லா மதத்தினர்களிடையும் அடிப்படையான கொள்கைகளில் வித்தியாசம் இல்லையென்றே சொல்லலாம். அவையாவம் தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்ற மூன்று விஷயங்களைப்பற்றியே கூறுகின்றன. அதாவது அடையத்தக்க வஸ்து எது? எவ்வாறு அடையலாம்? அடைவதினால் கிட்டும் பலன் யாது? என்பனவற்றைக் குறிப்பதாகும். பேத அபேத தத்துவத்தை உணர்ந்தவனே சமரச சன்மார்க்க முடையவனாக இருக்கமுடியும்.

பொதுவாக பிரம்மம் என்பது ஒன்றுண்டு. அதுவே நாராயணன் எனப்படும். அப்பரம் பொருளுக்கு இருவித தசையுண்டு. ஒன்று வ்யாவகாரிக தசை. மற்றொன்று பாரமார்த்திக தசை. வ்யாவகாரிக தசையில் ஈஸ்வரன் சகுணப் பிரம்மமாக உபாசிக்கப் படுகிறான். மாயையினால் பொருள்களிடையே பேத தரிசனம் ஏற்படுகிறது. பாரமார்த்திக தசையில் (சமாதி தசை) நிர்குணப் பிரம்ம உபாசனை நடைபெறுகிறது. வைணவர் (விசிஷ்டாத்வைதிகள்) சித்தி பெற சகுண உபாசனை ஒன்றே போதும் என்று கருதுபவர். அத்வைதிகள் சகுண உபாசனையில் துவக்கி நிர்குண உபாசனையில் சித்திபெற எண்ணுபவர்கள்.

எதிலும் உபாசனை முக்கிய மாதலால் அடியார்கள் பக்தியுடன் உபாசனையை மேற்கொள்வது முறையாம், இவ்விஷயத்தில் நாம் கணிதத்தில் 'லீலாவதி' எடுத்துக்கூறிய தத்துவத்தை உணர்ந்தொழுக வேண்டும். ஒன்றுக்குப்பக்கத்தில் 1111 என்று போட்டுக்கொண்டே போனால் எண்ணின் மதிப்பு, ஒன்று தனித்தனியாக இருப்பதைவிட பன்மடங்கு அதிகமாகும் என்பதைப் போலதனித்தனியாக அடியார்கள் உபாசனை புரிந்து பெறும் பலனைக்காட்டிலும், பல அடியார்கள் ஒருமிக்கச் சேர்ந்து ஆண்டவனை உபாசித்தல் அதிக நன்மையை பயக்கவல்லது என்று கூறின் அது மிகையாகாது, அடியார் கூட்டம் அன்பத்தனை பூண்டு ஆருயிரோம்பும் ஆற்றல் அடைய ஆண்டவன் அருள்புரிவான். ஐயமில்லை!

ஓம் ஸ்ரீ நாராயணாய நம:

ஆகத்துளேமகிழ்ந்த ஜோதிப்ரகாச இன்பம்

பழம் பழனி

(கி. வா. ஜகந்நாதன்)

[மலர் 1. 17-ம்பக்கத் தொடர்ச்சி]

2

அக்காலத்தில் சேரசோழ பாண்டியர்கள் செங்கோல் செலுத்தி வந்தனர். அவர்களை அன்றி அங்கங்கே சிற்றரசர்கள் பலர் சிறு சிறு நாடுகளை ஆண்டுவந்தனர். அவர்களுக்குள் பேகன் என்பவன் ஒருவன். தம்பால் வந்தவர்களுக்கு அளவில்லாமல் பொருளை வழங்கும் வள்ளல்களில் ஏழுபேர் மிகக புகழ் உடையவர்கள். அவர்களைக் கடையெழுவள்ளல்கள் என்று பிற்காலத்தில் வழங்குவார்கள். அந்த ஏழு பேர்களில் பேகனும் ஒருவன். மாரிக் காலத்தில் ஒரு மயில் தோகையை விரித்து ஆடும் போது சற்று உடல் சிலிர்க்கவும், குளிரால் நடுங்கிய தென்று கருதித் தன் மேல் போர்த்திருந்த விலையுயர்ந்த போர்வையை அதன் மேலே போர்த்தின அருளாளன் அவன். மயிலுக்குப் போர்வை அளித்த இந்தச் செய்தியைப் புலவர்கள் பலபடப் பாராட்டி யிருக்கிறார்கள்.

இந்தப் பேகனுடைய முழுப்பெயர் வையாவிக் கோப்பெரும் பேகன் என்பது. ஆவியர் என்னும் குலத்திலே பிறந்தவன் அவன். அந்த ஆவியர் குலத்தினர் தமக்குத் தலைநகராகக் கொண்ட ஊரே ஆவினன்குடி. ஆவிக்கு நல்ல ஊராக இருப்பது என்பது அதன் பொருள். ஆய் என்ற வள்ளல் இருந்த ஊருக்கு ஆய்குடி என்ற பெயர் வந்ததைப் போன்றது இது.

ஆவி வைகும் இடம் ஆதலின் வைகாவியூர் என்ற பெயரும் இதற்கு அமைந்தது. அதுவே நாளடைவில் வைகாவூர் என்றும், வையாவிபுரி என்றும், வையாபுரி என்றும், வையாவி என்றும் மாறி வழங்கியது. வையாவிக்குத் தலைவன் பேகன்; ஆகவே அவனை வையாவிக்கோ எனப்புலவர்கூறினர். ஆவியர்குலத்தில்வந்தவனாதலின் ஆவியர் கோமான் என்று பாராட்டினர்.

ஆவினன்குடியாகிய வையாபுரியைத் தலை நகராக உடைய நாட்டுக்கு வையாபுரிநாடு என்று பெயர். கொங்கு நாட்டைச் சேர்ந்த பல சிறு நாடுகளில் வையாபுரி நாடும் ஒன்று; அதனை ஆவினன்குடி நாடு என்றும் சொல்வதுண்டு.

ஆவிக்குளேது லங்கி அருளாதோ

"வல்லமை செறிந்த திரு வாவினன் குடி நாடு" என்பது கொங்குமண்டல ஊர்த்தொகை என்னும் நூலில வரும் பகுதி.

"சேரர் கொங்குவை காவூர் நன்னுடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே"

என்ற அருணகிரி நாதர் திருவாக்கில் இந்த நாடு வைகாவூர் நாடு என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது. கொங்கு மண்டல சதகம் பேகன் இருந்து அரசாண்ட இடம் வையபுரி என்று சொல்லும்.

கையாரக் கான மயிலுக் கிரங்கிக் கலிங்கம்அருள்
செய்யான் டகைகரு ணைக்குவைப் பாகத் திகழ்தருமவ்
வையாவிக் கோப்பெரும் பேகனே னும்பெருவள்ளல்தங்கு
வையா புரியெனும் கோநக ருங்கொங்கு மண்டலமே.

ஆவினன்குடி முருகனது படை வீடுகளுள் ஒன்று. அந்த ஊரைத் தன் தலைநகராகக் கொண்ட பேகனுக்கு முருக வேளிடத்தில் சிறந்த பக்தி இருப்பது இயல்பே. ஆவியர்குடிக் கெல்லாம் குலதெய்வமாக முருகன் விளங்கினன் என்று கொள்வதிலும் தவறு இல்லை. பக்தர்களுக்குத் தம்முடைய வழிபடு கடவுளோடு தொடர்புடைய பொருள்களிடத்திலெல்லாம் அதிக அன்பு இருப்பது இயற்கை. முருகன் அடியார்களுக்கு வேல், மயில் என்ற இரண்டின் பாலும் அளவற்ற அன்பு உண்டு. 'வேலும் மயிலும்' என்பதையே மந்திரம் போல உச்சரித்து இன்புறுவார் பலர்.

மலைச்சாரலில் வானம் சிறு துளி துளிப்பதைக் கண்டு தோகை விரித்து ஆடியது மயில். அதன் அழகிய தோற்றத்திலே ஈடுபட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான் பேகன். முருகனுக்கு ஊர்தியாக விளங்கும் மயிலினது நடனம் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. மயில் தோகையை விரித்து நிற்கும்போது, அடிக்கடி சலார் சலார் என்ற ஒலி தோன்ற சிலிர்க்கும். இது அந்தப்பறவைக்கு இயல்பு. பேகனும் அந்தச் சிலிர்ப்பைக் கண்டான். அதைக் கண்டு குளிரினால் நடுங்குகிறதோ என்ற ஐயம் அவனுக்கு உண்டாயிற்று. செல்வ வாழ்வில் வாழும் அவனுக்கு, மயில் மழைக்கு அஞ்சாது, மகிழுமென்பது தெரியவில்லை. ஆண்டவனது வாகனமாக உள்ள மயில் நடுங்குவது தகுமோ என்றே அவன் உள்ளம் எண்ணியது. கருணையும் முருகனது அன்பும் இடம்பெற்ற உள்ளம் அது. உடனே தன்மேல் போர்த்திருந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்து மயி

ளுக்குப் போர்த்துவிட்டான். 'இந்த மயில் இதை உடுத்துக்கொள்ளுமா? போர்த்துக் கொள்ளுமா?' என்று அவன் யோசிக்கவில்லை. அது அதனைப் பயன்படுத்திக்கொள்ளாது என்பதை அவன் பிறகு உணர்ந்திருப்பான். ஆயினும் அந்தக் கணத்திலே பக்திபாவசத்தால் போர்வையை அளித்தான்.

என்றும்

உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்

என்று அவனைப் பரணர் என்ற புலவர் பாராட்டுகிறார்.

3

பழனி என்பது மலையின்பெயர். அதன் பழம்பெயர் பொதினி. பொதினியே மாறிப் பழனி என்று ஆகியிருக்கலாம். முடிமன்னர்களையும், குறுநிலமன்னர்களையும் புலவர்கள் பாராட்டிப் பாடும் போது அவர்களுக்குரிய சிறப்பையும், அவர் நாட்டுக்குள்ள சிறப்பையும் சொல்வார்கள். ஊர், மலை, ஆறு என்னும் இவற்றைச் சார்த்தியும், பாராட்டியும் புகழ்பாடுவார்கள். அப்படிப்பாடும் வகையில் ஆவியர்குடிக்கு உரியது பொதினி என்னும் மலை, என்று தெரிய வருகிறது.

நெடுவேள் ஆவி
அறுகோட் டியானைப் பொதினி
முழவுற திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி

என்று மாமூலனார் என்னும் புலவர் பொதினியை ஆவிக்குரிய மலையாகப் பாராட்டுகிறார். வேறு சில இடங்களில் பேகனைப் 'பெருங்கல் நாடன் பேகன்' என்று புலவர்கள் குறித்துச் சொல்கின்றனர். 'பெரிய மலையையுடைய நாட்டுக்குத் தலைவன் பேகன்' என்பது அதன் பொருள். பெருங்கல் என்பது பொதினிமலையைக் குறிப்பதென்றே கொள்ளலாம்.

ஆவினன்குடியாகிய ஊரும், பொதினியாகிய மலையும் பேகனுக்கும் அவன் குலத்தினருக்கும் உரியன. பேகனை, முருகனைப்போலப் போர்புரியும் திறலுடையவன் என்று பாராட்டுகிறார் ஒரு புலவர்.

ஆவினன்குடியில் முருகன் திருக்கோயில் பழங்கால முதலே இருக்கிறதென்பதற்குத் திருமுருகாற்றுப்படை முதலிய நூல்கள் சான்று பகர்கின்றன. ஆனால் பொதினியாகிய பழனிமலையில் முருகனுக்கு ஆலயம் இருந்ததா? அதைப்பற்றிய குறிப்பு ஏதாவது பழைய நூல்களில் உண்டா?—இத்தகைய கேள்விகளுக்கு விடையளிப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம். சில ஆராய்ச்சிக்காரர்கள் பழனிமலைக் கோயில் பிற்காலத்ததென்றும், திருவாவினன்குடியே பழங்காலத்தில் இருந்ததென்றும் சொல்வதுண்டு. ஆவினன்குடியைப்போலவே பொதினியாகிய பெருங்கல்லிலும் முருகன் இருந்து மக்களைப் பாதுகாத்தான் என்பதற்குரிய குறிப்புக்கள் சங்ககாலத்து நூல்களில் இருக்கின்றன. அவற்றைப் பார்க்கலாம்.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர்பாடிய செய்யுள் ஒன்றில் பாரி முதலிய எழுவள்ளல்களைப்பற்றி அவர் சொல்கிறார். சிறப்புடைய மலையை யார் பெற்றிருக்கிறார்களோ, அவர்களைப்பற்றிச் சொல்லுகையில் அந்த மலையையும் சொல்கிறார். பாரியின் பறம்பு மலையையும், ஓரியின் கொல்லிமலையையும், எழினியின் குதிரை மலையையும் சொல்லியிருக்கிறார். பேகனைப்பற்றிச் சொல்லும்போதும் பெரிய மலையையுடைய நாடன் எனகிறார். மலையின் பெயரைச் சொல்லவில்லை. ஆனால் அந்த மலையைப்பற்றிச் சிலசெய்திகள் சொல்கிறார்.

ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கும் நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும்

என்று பேகனைப்பற்றிச் சொல்கிறார். "மிகக் குளிர்ந்த மலைப்பக்கத்தில் இருள் செறிந்த பெரிய குகைகளையுடையதும், பிறரால் வெல்லுவதற் கரிய திறலையுடைய தெய்வம் காக்கும் உயர்ந்த உச்சியையுடையதுமாகிய பெரியமலைக்கு உரிய நாடனாகிய பேகனும்" என்பது இதன்பொருள்.

அவனுடைய மலை தனிமலை; மலைத்தொடர் அன்று; சிறு குன்றும் அன்று. ஆகவே அதைப் பெருங்கல் என்றார். அதன் உச்சியிலே தெய்வம் நின்று காக்கிறது என்றும் சொல்கிறார். அருந்திறற் கடவுள் என்று அக்கடவுளைப் பாராட்டுகிறார்.

சிறுபாணாற்றுப் படையில், "அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் பேகனும்" என்று பேகன் பாராட்

டப் பெறுகிறான். "அரிய திறல்பெற்ற தெய்வத்தை உடைய ஆவியர் பெருமகன்'' என்று அவனுடைய குலதெய்வம் குறிக்கப்பெறுகிறது. அருந்திறற் கடவுளும் அருந்திறல் அணங்கும் * ஒருவரே.

அந்தக் கடவுள் யார்? மலைமேல் இருக்கும் கடவுள், ஆவியர் குல தெய்வமாகிய முருகன்தான். பெருங்கல்லாகிய பொதினியில் நின்று அந்த மலையையும், அது உள்ள வைகாவூர் நாட்டையும், அதனையுடைய ஆவியர் குலத்தையும் காப்பாற்றி அருள்செய்பவன் முருகன் என்று அறிந்துகொண்டோம். ஆகவே பொதினி யாண்டவனாகிய பழனியாண்டவன் புதியவனல்ல, பழையவனே என்றுதானே முடிவுகட்டவேண்டும்?

கபிலர் என்னும் புலவர் பேகனை ஒருபாட்டால் (புறநானூறு, 143) பாராட்டுகிறார். அவனையும் அவன் மலையையும் பாடினதாகச் சொல்கிறார். "நின்னும் நின்மலையும் பாட'' என்று கூறுகிறார். அவன் மலையாகிய பொதினியைப் பாடுவதில் புலவருக்கு ஆனந்தம். அந்த மலையில் நிகழும் அதிசயத்தை அந்தப் பாட்டிலே சொல்கிறார்.

குறிஞ்சிநிலத் தெய்வம் முருகன். அந்த நிலத்து மக்கள் குறவர். பேகனது நாட்டிலுள்ள குறவர், மழை இல்லையெனில் உடனே பொதினி ஆண்டவனுக்குப் பூசை போடுவார்கள். மலர் தூவி வணங்குவார்கள். ஆண்டவன் கருணையால் மழை பொழியும். அதிகமாகப் பொழியும். அளவுக்கு மிஞ்சி மழை பொழிந்தாலும் கெடுதல்தானே? ஆகவே முன்பு மழைவேண்டுமென்று பூசைபோட்ட அந்தக் குறவர்மாக்களே இப்போது, மழை நிற்கட்டும் என்று பொதினி ஆண்டவனைப் போற்றி வழிபடுகிறார்கள். மழை நின்று விட்டது. அதனால் மிக்க மகிழ்ச்சியை அடைந்த அக்குறவர் புனத்திலே விளைந்த தினையைப் பொங்கி விருந்து அயர்கிறார்கள்.

> மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்
> மாரி ஆன்று மழைமேக்கு உயர்கெனக்
> கடவுட் பேணிய குறவர் மாக்கள்
> பெயல்கண் மாறிய உவகையர், சாரல்
> புனத்தினை அயிலும் நாட

---

* அணங்கென்பது ஆண் தெய்வங்களையும் குறிக்க வருவதுண்டு. "சினைச்சுறவின் கோடுநட்டு, மனைச்சேர்த்திய வல்லணங்கினான்'' என்பதில் வருணனை, அணங்கென்று புலவர் சொல்கிறார்.

[வான் கொள்க—மழையைப் பெறுக. பலி-பூசைக்குரிய பண்டங்கள். ஆன்று-நின்று. மழை-மேகம் மேக்கு-மேலே, பெயல் கண்மாறிய-மழைவேறிடத்துக்குச் சென்றதனால் உண்டான. அயினும்-உண்ணும்.]

குறவர் மாக்கள் வணங்கும் கடவுள் முருகன்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

பொதினி ஆண்டவனுக்குக் கோயிலும் அக்காலத்தில் இருந்தது. பொன்பொதிந்த திருக்கோயிலென்றுகூடத் தோன்றுகிறது.

ஆவிபொன்னுடை நெடுநகர்ப் பொதினி

என்ற அகநானூற்றுப் பாட்டில் (61) ஆவிக்குரிய பொதினியில் 'பொன்னுடைய உயர்ந்தகோயில்' இருந்ததை மாமூலர் சொல்கிறார். நெடுநகர் என்பதுஉயர்ந்த கோயில் என்ற பொருளை உடையது,

" முக்கட் செல்வர் நகர் " (புறநானூறு)

" பூமுடி நாகர் நகர் " (பரிபாடல்)

என்று கோயிலை, நகர் என்ற சொல்லாலே பழங்காலத்துப் புலவர்கள் குறித்தார்கள், ஆவியினது பொதினி, பொன்னுடை நெடுநகரையுடைய பொதினி என்று கூட்டி அர்த்தம் செய்யவேண்டும். பொன் என்பது தங்கத்தையே குறிககவேண்டும் என்பது இல்லை. எல்லா வகை உலோகங்களையும் பொன் என்று குறிப்பது தமிழ்மரபு.

இங்கே, பொதினியில் ஒருகோவில் இருந்ததென்பது குறிக்கப்படுகிறது. அந்தக் கோவில் முருகவேளுடைய கோயிலே என்று முன்னே சொன்ன செய்திகளைக் கொண்டு முடிவு கட்டலாம்.

ஆகவே, பழனியாண்டவனும் பழம்புலவர்களாற் பாராட்டப் பெற்றவனென்பதும், அற்புத நிகழ்ச்சிகளை அருளால் நடக்கச் செய்கிறவன் என்பதும், அவனுக்கு ஒரு கோயில் பொதினியின் உச்சியில் இன்று போலவே அன்றும் இருந்தது என்பதும். ஆவியர்குடிக்கெல்லாம் குலதெய்வமாக ஆண்டவன் விளங்கினுனென்பதும், கடையெழுவள்ளல்களில் ஒருவனாகிய பேகன் முருகன் அடியானென்பதும் பழைய நூல்களிலே உள்ள குறிப்புக்களால் தெரிந்து கொள்ளலாம்.

 [27ம் பக்கத் தொடர்ச்சி

பக்தியும் இசையும்

ஸ்ரீ த்யாகராஜ தெய்வீக இசைப்பொருள் விளக்கம்

[கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை]

இதன் வாயிலாகப் பழைய அநாகரீகமுறை ஒழிந்து பக்தி வளைச பரவலாயிற்று. இருப்பினும் நமது நாட்டவர்கள், நாகரீக இரசனையே அறியாத மேல்நாட்டவரின் எதிர்மாறான நாகரீகத்தில் ஈடுபட்டு அவர்கள் அரசாட்சியின் கண் பணிந்து அவர்கள் பாஷையைக் கற்றதின் பயனாக அந்த அநாகரீக முறையில் மனம் ஒன்றியவர்களாய் தங்களை ஆக்கிக்கொண்டு உலகமே கற்றுக்கொள்ளும் திறம் வாய்ந்த நம்மவரின் தெய்வீகநாகரீகத்தை மறந்து பெண்களையெல்லாம் பேய்க்கூத்தாடும் மார்கத்தில்கொண்டுவந்து விட்டார்கள்.

மேலும், தற்போதோ குலப்பெண்கள் எல்லாம்கூட இந்தப் பேய்க்கூத்துப் பயித்தியம் பிடித்து ஆடத் தலைப்பட்டு விட்டார்கள். இது இப்படியே போய்க்கொண்டிருக்குமானால் மேல் நாட்டவரைப் போல் நாளாவட்டத்தில் வாரத்திற்கொருவரை மணந்து, வாழ வேண்டிய அவதியில்தான் கொண்டுசேர்க்கும் என்பதில் ஒருசிறிதும் ஸந்தேகமே வேண்டாம் என்பதோடு இளஞ்சாளைகளான ஆண் உலகத்தவரும் ஒழுககம்பெறாது பாழ்படுவர்கள் என்பதில் ஒரு சிறிதும் ஸந்தேகமே கொள்ளவேண்டியதில்லை.

இது நிற்க, சினிமா என்னும் ஒரு துறையில், நமது ஸகோதரிகளின உருப்புக்களை எவ்வகையிலெல்லாம் எடுத்துக்காட்டி மக்கள் உலகம் பாழ்பட உதவவேண்டுமோ அவ்வகையிலெல்லாம் பெண்ணுலகிற்கே இழிவைத்தருகின்ற முறையில் கலைகலையென்று சொல்லிக்கொண்டு எப்படியேனும், பணம் சம்பாதித்து வயிறு வளர்ப்பதையே குறியாகக்கொண்டு பெண்ணுலகத்தையே அவமதித்து வருவதோடு அநியாயமான காதாலேயேகேட்கத் தகுதியற்ற காம உணர்ச்சி சொறகளால் ஆக்கப்பட்ட பாட்டுக்களைப்பாடி மக்கள் உலகத்திற்குத் தீங்குசெய்து வருகிறார்கள். இவைகளும்கூடமானவரை விலக்கப்படவேண்டியவையே.

நிற்க, அநேக பெரியார்கள். பெண்களுக்கு உடற்பயிற்சிக்கு இக்கலைமிக்க உதவிபுரிகின்றது என்று குதர்க்கம் பேசுகின்றார்கள்.

கூடலாகப் பெருமை தருவாயே

இவை ஒருசிறிதும் பொருந்தாத வாதம். பெண்மணிகளுக்குத் தமிழ் மொழியில் இல்லாள் என்னும் சொல்கொடுக்கப்பட்டுள்ளது. இல்லாள் என்றால், வீட்டை ஆக்ஷிபுரிபவள் என்று பொருள்கொள்ள வேண்டும். வீட்டுவேலைகளை செவ்வனேசெய்வது, தனது கணவனுக்கான தொண்டைச்செய்வது அதாவது அறுசுவை உண்டி சமைத்து தனதுகணவனை உலகவர்முன் வீரகனுத்திகழ, அறிவுடையவனாகத்திகழ உணவோடு தனது உத்தம குணமாகிய கற்புகுணத்தையும் தனது புருஷன் நல்ல பலமுடையவனாகத் திகழவேணுமே என்ற அன்பு எண்ண அவாவையும் கலந்து தனது தெய்வீக காதலென்னும் ப்ரீதியையும் சேர்த்து ஊட்டி மனையை மாண்புறச்செய்தலே பெண்ணிற்கு உடலுக்கு உறுதி பயக்கும் உடற்பயிற்சியாகும்.

இதைவிட்டு, கூத்தடிப்பதும், பெண்களின் இயற்கைக்கு விரோதமாக ஆண்களோடு சரிநிகர் சமத்துவம் வேண்டுமென்று பல துறைகளிலும் வேலைசெய்ய முனைவதும் பெண்களின் இயற்கைக்கு மிகவும் கெடுதலானது என்பதை மறந்து அநாகரீகமான மேல் நாட்டுப் பித்துப்பிடித்து பெண் உலகம் பரிதாபப்படும் நிலைமையில் இன்று அவதியுறுகின்றது என்றுதான் சொல்லவேண்டி வந்துவிட்டது. இன்னிலைமாறி, பெண், பெண்ணாகவும், ஆண் ஆணாகவும் திகழ்ந்து நமது பழயகால அறிவுடைய மிகநாகரீகமான நிலைமை என்றுதான் இந்தியா அடையுமோ அன்றுதான் நாம் மனிதர்களாய்ப்பிறந்த பயனைமுற்றிலும் அடைந்து இறைவனை அறிந்து உத்தமம் எய்தக்கூடும்.

இறைவன் திருவருள் ஆணுக்கு வீரமும், திண்மையும் பெண்ணிற்குச் சாந்தமும் மென்மையும் அளித்து இரண்டும் ஒன்றை ஒன்று தழுவி உலகம் இன்பக் கடலில் மூழ்கி இருவர்களும் இறைவன் திருநாமத்தைப் பஜித்து மனிதர்களாய்ப்பிறந்த பயனை அடையவே இவ்வாறு இயற்கையிலேயே ஸ்ருஷ்டித்துள்ளான். இதை மறந்து நமது பெரியோர்கள் வகுத்துள்ள மார்க்கத்தையும் துறந்து, மேல்நாட்டு அநாகரீகமுறையில் மனம் இழுக்கப்பட்டவர்களாய் ஆகி இயற்கைக்கு விரோதமான நிலமையில் ஆசையுற்று, ஒரு சிறிதும் பொருந்தாத மிருக நாகரீகத்தில் செல்லுகிறோம்.

இதைக்கண்டுதான் த்யாகப்ரும்மம் ஆன்ம லாபத்திற்கென்றே தோன்றிய நாதக்கலை இப்படி மனிதனின் வேண்டாத மன

உணர்ச்சிக்கும் கேவலம் உலக சுகத்திற்கும் பயன்படுகின்றதே என்று வருந்தி விசனப்பட்டுள்ளார்.

இது தயாகப்ரும்மத்தின் அபிப்ராய மாதலாலும், எனக்கும் எனக்குத்தோன்றிய வரையில் சரியென்று படுவதாலும் மக்கள் உலகத்திற்கு எனது கடமைமையைச் செய்யவேண்டியதாலும், இது யாரையும் குறிப்பிடுவன அல்ல. ஆகவே பொதுவாக இந்த நிலைமை மாறி இசை தெய்வீகபக்தி நிலைமைககு வந்து மக்கள் உலகம் பயனுறும் நாள் என்றுேவா அன்றுேவ நாம் பிறந்தநாள்.

சித்தர் நூல் முன்னுரை

(ஸ்ரீ வத்ஸன்)

மூலமுதலாய் முச்சுடராய் நின்றதொரு சோதிபாதம்
கருணையாய் நீதியாய் நின்றதொரு வாலைபாதம்
தூலமாய் சூக்குமமாய் நின்றதொரு கணபதியின் பாதம்
வாசி வடிவேலாய் சைவமாய் நின்றதொரு வேலன்பாதம்
தாவமதில் தென்மலைவா முகத்தீசன் பாதம்
மேதினியில் எனையாண்ட சற்குருவின் பாதம்
சென்னிமேல் வைத்து போற்றினேன் பலகாலும் போற்று
வேனே !!

"மாசற்ற கொள்கை மனத்திலடைந்தக் கால்
ஈசனைக்காட்டு முடம்பு".

என்பது நமது ஔவைப் பிராட்டியின் வாக்கு. இல் வாழ்க்கையின் நலத்தையே கருதிக் காலத்தை கழிக்கும் இக்காலத்தில், மனத்தூய்மை அடைய ஒரு தூண்டுகோலாக விளங்கும் இந்நூல் இப்பொழுதாவது தோன்றியிருப்பது, மிகவும் போற்றத் தக்கதே. மனது செம்மை அடைய அடைய "நெஞ்சமாகிய கல் உருகஉருக" அது நம்மைச் சும்மா இருக்க விடாது, பரமனைப்பற்றிய விஷயங்களில் பற்றத்தான் செய்யும். அப்பற்றுதலை ஸ்ரீ அப்பர் ஸ்வாமிகள் தமது திரு அங்க மாலையில் கூறியதுபோல

மிதமுனது நுபதான மருள்வாயே

"நெஞ்சினால் நினைத்து வாயினால் வாழ்த்துவதுடன்" நில்லாது நூல்வாயிலாகப் பரந்த ஜன சமூகத்தினர் இடையேயும், அவ்வுணர்ச்சி ஏற்பட ஓர் தூண்டு கோலாய், உள்ள இவ்வரிய சஞ்சிகை தற்போது மாதம் ஒரு முறையாக வெளிவர இருப்பினும், நாளடைவில் வாரம் ஓர் முறையாக வருமாறு நமது ஆசிரியருக்கு இறைவன் அருள் புரியட்டும்.

நிற்க "மிருதம்" என்றால் இறத்தல், அழித்தல் எனப் பொருள், அமிர்தம் எனில் அழியாமை இறவாமை எனப் பொருள். இந்த சஞ்சிகை, இதனது பெயருக்கேற்ப அழியாத் தன்மையுடன் இருப்பதுடன்கூட, இறைவனைப் பற்றிய பல்வேறு வாசகங்கள் இருப்பினும, இந்த சஞ்சிகையில் வரும் வியாசங்கள், பாடங்கள் யாவும் எந்த மெய்ப் பொருளைக் கண்டால், கேட்டால், உணர்ந்தால், இச்சரீரமும் இந்த ஆன்மாவும் அழிவற்றதன்மையை யடையுமோ, அத்தகைய கட்டுரைகளை இச் சஞ்சிகையின் வாயிலாக மென்மேலும் எதிர் பார்ப்போமாக.

தமிழ் மொழியில் உள்ள பல்வேறு நூல்களைப் பற்றிய ஆராய்ச்சிகளுள் மகிமைபொருந்திய சித்தர் நூல்களைப் பற்றி அடியேனின் சிற்றறிவுக்கு எட்டியவரையில் இச் சஞ்சிகை வாயிலாக வெளியிடச் சந்தர்ப்பமளித்த ஆசிரியருக்கு என் நன்றியை அறிவித்துக் கொள்கிறேன்.

சித்தர் நூல்

பஞ்சை ஒன்று சேர்த்துத் திரித்து இழைப்பதினின்றும் பஞ்சுநூல் ஏற்படுகிறது. ஆதியில் ஈசனால் ஏற்படுத்தப் பட்ட எழுத்துக்களைச்சேர்த்து இழைக்கும் சொற்றொடர்களினின்றும் கல்வி நூல் ஏற்படுகிறது. ஆயினும் எவ்விதமானசொற்றொடருக்கு இப்பெயர் முதன்மை வாய்த்தது எனில், மனிதன் என்னும் பொதுச்சொல் உயிருள்ள மனிதனையே குறிக்கிறது. மணம் என்ற பொதுச்சொல் நறுமணத்தையே குறிக்கிறது. அதேபோல் நூல் என்னும் பொதுப்பெயர் திருமந்திரம் பாடிய நமது திருமூலஸ்வாமி

பத்மபதத்தினில் வைத்தருள்துய்த்திரை

வாக்குப்படி "நூலது வேதாந்தம்" அந் நூல் என்ற சொல் வேதாந்த நூலுக்கே உரித்தானது என ஏற்படு கிறது.

இனி அவ்வேதாந்த நூல் எதைப்பற்றியதாக யிருத் தல் வேண்டும், எதை போதிப்பதில் சிறந்துவிளங்கவேண் டும் என்பதைச் சொல்லவேண்டி நூலது வேதாந்தம், நுண்சிகை ஞானமாம் என்கிருர். அந்த வேதாந்த நூல் ஞானத்தை போதிப்பதில் தலை சிறந்ததாக இருக்கவேண் டும் என்று கருத்து.

அந்த ஞானம்தான் யாது, எதை போதிப்பதாயிருக்க வேண்டும், எதை முதன்மையாகக்கொண்டு, எதைத்தழுவி அனுசரித்ததாக விருக்கவேண்டும், எதைக் கற்றலும் ஓத லும் இன்றியமையாதது எனில்

"ஞானத்தின்மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று......"

"ஞானப் பாலாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன் நற்போதியின் கீழே"

அதாவது, அறம், நெறி, சமயம் இவற்றையெல்லாம் கடந்த அந்த நாதனை அர்ச்சித்திருந்தேன் என்கிருர். (திருமூலர்)

ஔவை பிராட்டியும்

கற்கிலும் கேட்கிலும் ஞானம் கருத்துற
நிற்கில் பரம் அவை வீடு.

எதைக்கற்றும் கேட்டும் கருத்தில் வைத்தால் மோட்சத் தைக் கொடுக்குமோ, எந்த

"நல்லானைப் பூசித்து நாதனென உருகில்
நில்லாதோ ஈசநிலை (ஔவை குறள்)

எந்த நல்லானைப் பூசிப்பதினின்றும் ஈசநிலை ஏற்படுமோ அப்படிப்பட்ட பிரபுவை ஆதிநாயகனைப் பற்றியதாக இருத்தல்வேண்டும் என்றும் ஏற்படுகிறது.

இந்த ஆதிநாதனையே வேதமும் குறிக்கிறது என்பதைக் காட்டவேண்டி, ஸ்ரீ அகஸ்தியபகவானும் "ஓதுவது வேதமே ஓதவேண்டும் உலகத்தில் வேதமலால் ஒன்றுமில்லை" என்று தமது பூரண சூத்திரத்தில் சொல்லுகிறார்.

இதே கருத்தை பிரும்ம சூத்திரத்தின் கர்த்தா பாத நாராயண ஸ்வாமியும் "அத இதி பிரும்ம விக்ஞாஸஹ" இனி பிரம்மத்தைப்பற்றிய ஆராய்ச்சி என்று, எல்லாவித ஆராய்ச்சிகளும் முடிந்தபின்னர், முக்கியமாய் அறியவேண்டியது பிரம்மஞானம், என்கிறார். அதையே பிரும்ம வித்தை சுத்தஞானம், பரஞானம், ஆக்கல், அழித்தல், அறிவு என்று பலவாருகக் கூறப்படுகிறது.

இனி அத்தகைய நாதனைப் பற்றிய ஞானம்தான் யாது? அந்த பிரும்மவித்தையை கற்பது, அறிவது, அனுசரிப்பது, அனுபவிப்பது எவ்வாறு எனில், இங்குதான் வேறுபாடுகள்-வெவ்வேறு முறைகள் காணப்படுகின்றன.

(தொடரும்)

அடியார் ஞாயிறு திருக்கூட்டம்

திருக்கூட்டத்தின் அடியார்கள் சென்னை மல்லீஸ்வரர் கோவிலில் அனுபூதி விளக்கத்தில் சென்ற ஞாயிற்று கிழமைகளில் காலையில் திருப்புகழ்மணியுடன் கூடினார்கள். அனுபூதியில் 27. 28 எண்ணுள்ள பாட்டுகள் விஸ்தரிக்கப் பட்டன. விதியை உடம்பில் காணலாம். கதியை முருகனிடம் காணலாம். முருகனை 'பொன்னே' என்று புகழ்ந்தார். பொன்னுக்கு பொன்பெற்றவரால் ப்ரயோஜனமின்றி, பொன்பெற்றவருக்கு பொன் ப்ரோஜனப்படுவது போல், தனக்கு ஒருநலமின்றி ஜீவராசிகளுக்கே கதியாய் ஒளிர்வதால் முருகன் பொன்னே எனப்பட்டார் என்றார். 'மணி' முருகன். சுப்ரமணி, மந்த்ரமணி, தேஜோமணி, ஓசைமணி, சௌந்தர்யமணி, கண்ணில் கருமணி, முருகன். ப்ரம்மமாய் நிற்கும் பொருள் ஆனதால் பொருளே

என்றார். அருளே! மன்னே! மயிலேறிய வானவன் உயிர் களுக்கு உயிராய் இருந்து ஓங்கார பொருளாய் இருக்கும் தன்மையை விளக்கினார். பொருள் யாது? தன்னை இழந்த நலம் யாது? என்று எடுத்துக்கொண்ட கேள்விகளுக்கு 27, 28 பாட்டுகளில் பதில் காணப்படும் என்றார் திருப் புகழ்மணி. முருகனே பொருளென்றும் தன்னை விழுங்கி 'நான்' என்ற உணர்ச்சியற்று நிற்கும் நிலையின் சுகத்தை சொல்லமுடியாது என்றும் அருணகிரியார் தெரிவிக் கின்றார் என்றார். மேமீ 8வ ஞாயிற்றுக்கிழமை காலை முறையே திருக்கூட்டம் சென்னை மல்லீஸ்வரர் கோயிலில் கூடியது. 27 28 29 பாட்டுகளின் பொருள் விளக்கப் பட்டது அநுபூதியின் சிறந்த பாகம் தான் இவை. யான் எனும் என்னை விழுங்கினாலன்றி சத்தியம் தெரியாது என்றார் அருணகிரி. திருப்புகழ்மணி உவமை கூறினார். பரமசிவன் ஹாலா ஹல விஷத்தை விழுங்கினார். கிருஷ் ணன் நெருப்பை விழுங்கிவிட்டார். காட்டு தீயில் கோக் களும் கோபாலர்களும் அகப்பட்டுக்கொள்ள இந்த அற் புதமான தன் ஸ்வரூபத்தை காட்டினார். ஆகாததை விழுங்கிவிட்டால் ஆனதை ருசியாய் சாப்பிடலாம் போலும் நான்தான், நான்தான் என்பது ஒழிந்துவிட் டால், எஞ்சிய பொருள் எல்லாம்தான். எல்லாம்தான் னால் தத்துவம் கைகூடிவிடும். தானாய் நிலை நிற்பது தற்பரம். "நன்றென்றும் தீதென்றும், நானென்றும் தானென்றும், அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே— நின்றநிலை, தான் அது வாம் தத்துவம்......" என்பது ஔவை வாக்கு.

மானிடன் தற்பரமாய் இல்லை. இந்திரியங்கள் பர மாய் நிற்கின்றன. அவைகளுக்கு அடிமையாய் விட்டான். இந்திரியங்களை அடக்கி ஆள முருகனைக் கூப்பிட்டால் அவன் வந்து விடுவான். நாம் அவன் பரமாய் நின்று விட்டால், முருகன் இந்திரியங்களை அடக்கி ஆள்வான். தற்பரம் என்பதுதான் பரம்பொருள் அத்வைதம்.

தாயுமானார் சிற்பரவெளிக்குள் வளர் தற்பரமதான பொருளை வணங்குவாம் என்றார். அது அறிவுக்கு அறிவு.

(Absolute Knowledge), முழு முதல் ஞானம். இதிலிருந்து தான் பேதாஞானம் மாயையால் உண்டாகின்றது. பேதா ஞானம் ஒழிந்தால் (Relative Knowledge) முழு முதல் ஞானம் ஏற்படும். அதுவே ஆனந்த மயம். இந்த ஞானத்தை முருகன் என்றார் அருணகிரி. 'நீயான ஞானம்'', என்பது கந்தரலங்காரம். முருகன் ஞான ஸ்வரூபம். முருக நாமஸங்கீர்த்தனம் இந்த ஞானத்தை உண்டு பண்ணும். தோன்றி மறைவது இல்லையெனும் மாயை. தோன்றி மறைவது இல்லை யெனும்போதும் அதற்குள் இருப்பது ஞானம் மோனம். இதுதான் பேசா அனுபூதி மோனத்தைப் பற்றியும், "இல்லை எனுமாயையி லிட்டனை நீ" எனும் வாக்கியத்தைப் பற்றியும் விரிவாய் அடுத்த ஞாயிறு தினம் விளக்கப்படும்;

ராயப்பேட்டை புதுப்பாக்கத்தில் பால சுப்ரமணிய பக்தசபையில் கந்தரலங்காரம் விளக்கவுரை சென்ற சுமார் ஒரு வருஷமாய் உபன்யாசிக்கப்பெற்று; மேமீ 1உ முடிவுவிழா கொண்டாடப்பட்டது. உணர்ச்சியிலும் அன்பிலும் பக்தியிலும் ததும்பி நின்றனர் பக்தர் பெருங் கூட்டம். நன்றி பாராட்டமுடியாமல் தவிக்கின்றோம். என்றார்கள் அன்பர்களின் தலைவர். நன்றி உங்களுக்கே உரியதென்றுகூறி ஆயினும் நன்றி பாராட்ட சிந்தை உண்டேல் தன்னை அன்பர்களின் சேயாய் கருதப்பட வேண்டுகின்றேன் என மொழிந்தார் திருப்புகழ்மணி. வாழ்த்துப்பா அளிக்கவும் பெற்றார்.

சங்கர ஜெயந்தி உபன்யாஸங்கள் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றன.

கும்பகோணம்: திருக்குடந்தை சிவனடியார் திருக் கூட்டத்தாரால், சிலகாலமாக ஆதிவாரந்தோறும் பற்பல தலங்களிலும், குருவாரந்தோறும் ஸ்ரீ ஆதி கும்பேசர் ஆலயத்திலும் வழிபாடு நடத்தப்பட்டு வருகிறதை அங்கும், மற்றெங்கும் யாவரும் மகிழ்ச்சியுடன் பின்பற்றுவார்க ளென வேண்டுகிறோம்.

உகந்த பாதந்துணை யுறைசேய அருள்வாயே

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49. Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras 1.

குளித்தெடுத்த முருகன்

1. ஆழக்கடல் குளித்து ஆணிமுத் தெடுப்பதுபோல்
அருள்கடலில் நான்குளித்து முருகன்என்ற முத்தெடுத்தேன்
2. சூழநிற்கும் கள்வர்ஐவர் தட்டிப் பறிப்பாரோ
மாயப்பெருங்கள்ளி மயக்கிஎடுத் தேகுவளோ
3. பாழடிக்கும் ஆணவப்பேய் எடுத்துமறைத் திடுமோ
பாவிமனக் குரங்கு பல்லாற் கடித்திடுமோ
4. தோழன் குமரேசன்,—துணை இருந்து என்னகத்தில்
துஷ்டர்கள் வாராமல் காவல்புரிவானே
5. தாழவைத்து வாழவைக்கும் தணிகைமலை நாதனிந்த
ஏழையுள்ளம் நீங்காமல் என்றும் இருப்பானே
6. பேழைக்குள் பெரும்நிதிபோல் எம்பெருமான் முருகாநீ
பேதைமனம்காத்து அரும்பொருளாய்த் திகழ்வாயே.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

தமிழில் ஸ்ரீ வால்மீகி மகரிஷி ப்ரணீத

சுந்தரகாண்டம் (பாராயணத்திற்குரியது)

விலை ரூபா 2—4—0

ஸ்ரீ நாராயணதீர்த்தஸ்வாமிகள் அருளிய

கிருஷ்ணலீலாதரங்கிணி

விலை ரூபா 1—8—0

T. S. நாகராஜ பாகவதர் அவர்களால்
தொகுக்கப்பட்ட

பஜனோத்ஸவ பத்ததி

அணா 12.

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17. வெங்கடாசல செட்டி தெரு

திருவல்லிக்கேணி, :: மதராஸ் 5

Reg. No. M. 5390

72

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகள்

குழந்தைகருக்கு
12 காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை.
18 கர்ஜன் — கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் — பேதியாக மாத்திரை.

குடும்ப அவசியங்கள்
99 ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்.
77 காலரெக்ஸ் — அஜீர்ண பேதி காலராவிற்கு.

தின உதவிகள்
55 ஜிஞ்சிப் — அஜீர்ண பித்த சமனி.
78 கூலெக்ஸ் — உஷ்ண, சமன, ஸ்நான தைலம்.
61 நஞ்சன்கூடு பல்பொடி — (பயோரியா) பல் உபாதைகளுக்கு.

கூந்தல் செழிப்புக்கு
காஷ்மீர் குஸூம்
என்ற மலர் மூலிகையை உங்கள் எண்ணெயுடன் கலந்துகொள்க.

சிறந்த சரும வைத்தியன்
ஸான்டலக்ஸ் சந்தனக் களிம்பு.
காயம், தீப்புண், சொறி, சிரங்கு, பரு, குணமடைய.

மைசூர் பிரேமலீலா ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர்ஸ்பெஷல், அம்பர்ஸ்பெஷல், ஜவாது.

சோல் ஏஜெண்டு:- யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ் 1.
(மதுரை, கோவை, குடந்தை, பம்பாய்.)

"மாலா" வாசனைகள்
*
அத்தர்கள்
*
வாசனை மெழுகு (கோன்)
*
கைக்குட்டை சென்டு
*
சில்க் பைகள்
(ஆடைகளைக் காப்பாற்ற பெட்டியில் வைக்க)

("சிவ தாண்டவம்' 14 × 20 பல வர்ணப் படம்.) 1—8—0
(வருட சந்தா ரூ. 1 8 0 அனுப்பவும்) வெளிநாட்டுக்கு ரூ. 2